பரம்பரை சாபங்களும் பயமடையும் பக்தர்களும்

வேத ஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார்

கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் பொதுவான பயங்களில் ஒன்றாகப் "பரம்பரை சாபம்" உள்ளது. அதாவது, தங்களுடைய மூதாதையர் தேவனை அறியாதவர்களாக இருந்ததினால், அவர்கள் செய்த பாவங்களின் சாபம் தங்கள்மீது வந்துவிடும் என்கின்ற பயம் பொதுவாகவே கிறிஸ்தவர்களுக்கு உள்ளது. எனினும், இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, கிறிஸ்தவர்கள் பிறமதத்தவர் வாழும் பிரதேசங்களில் பிறந்து வளர்ந்தவர்களாய் இருந்தால், அவர்களையும் அறியாமல் அப்பிரதேச மக்களின் சிந்தனைகள் அவர்களுக்குள்ளும் சென்று விடுவதாகும். அதாவது, "பூர்வஜென்ம பலன்களை" அடிப்படையாகக் கொண்டே இவ்வுலக வாழ்வில் ஆசீர்வாதமும் சாபமும் வருகின்றது என்னும் பிற மதக் கருத்துள்ள பிரதேசத்தில் வளர்பவர்கள், தங்களையும் அறியாமல், பிறமதத்தினரின் இத்தகைய சிந்தனைகளுக்கு உட்பட்டு, தங்களுக்கு ஏதாவது விபரீதம் ஏற்பட்டால் அதைப் பரம்பரை சாபம் என்று எண்ணி விடுகின்றனர். இரண்டாவதாக, இவர்கள் வேதாகம சத்தியங்களை சரியாக அறியாதவர்களாக இருப்பதும் பரம்பரை சாபங்களைப்பற்றிய பயமுடையவர்களாய் இருப்பதற்கான காரணமாய் உள்ளது. உண்மையில், வேதாகம சத்தியங்களை சரியான விதத்தில் அறிந்திருந்தால் மாத்திரமே, நாம் எத்தகைய பிரதேசத்தில் பிறந்து வளர்ந்திருந்தாலும், அப்பிரதேச மக்களின் நம்பிக்கைகளினதும் சிந்தனைகளினதும் பாதிப்புக்கு உட்படாமல் இருப்போம். மேலும், தற்காலத்தில் ஓரளவுக்குப் பிரபலமாயுள்ள "பரம்பரை சாபங்களைப்பற்றிய" போதனை, தகப்பனுடைய பாவத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை வரை தாம் விசாரிப்பதாகத் தேவன் நியாயப்பிரமாணத்தில் குறிப்பிட்டுள்ளதைத் (யாத்.20:5, எண்.14:8, உபா.5:9) தவறாகப் புரிந்துகொண்டு உருவாக்கப்பட்டுள்ள ஒரு பிழையான உபதேசமாக உள்ளது. ஏனெனில், "தகப்பனுடைய பாவத்தை மூன்றாம் நான்காம் தலைமுறை வரை விசாரித்தல்" என்பது, "ஒருவனுடைய பாவத்திற்காகத் தேவன் அவனைத் தண்டிக்காமல் அவனுடைய பிள்ளையை அல்லது அவனுடைய வம்சத்தில் மூன்றாம் அல்லது நான்காம் தலைமுறையில் வருபவனைத் தண்டித்தல் என்னும் அர்த்தமுள்ள வசனம் அல்ல."[1]

"பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் விசாரித்தல்" என்பது, பிதாக்கள் செய்யும் பாவம் பிள்ளைகளிலும் இருப்பதினால், பிதாக்கள் செய்த அதே பாவத்தைச் செய்யும் பிள்ளைகள் தண்டிக்கப்படுவார்கள் என்னும் அர்த்தமுள்ள கூற்றாகும். அதாவது, தகப்பன் செய்யும் பாவம் அவனுடைய பிள்ளைகளினாலும் பின்பற்றப்படுவதினால், அவர்களும் அதே பாவத்திற்காகத் தண்டிக்கப்படுவார்கள் என்பதே யாத்திராகமம் 20:5, எண்ணாகமம் 14:8, உபாகமம் 5:9 என்னும் வசனங்களின் அர்த்தமாகும். இதனால்தான், இவ்வசனங்களில் "விசாரித்தல்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "பக்கட்" (*paqad*) என்னும் எபிரெயச் சொல்லுக்குப் பல அர்த்தங்கள் இருந்தாலும், இவ்வசனத்தின் இலக்கண அமைப்பு முறையின்படி, தேவனுடன் நேரடியாகப் பகையுடன் இருப்பவனை அல்லது, தேவனை நேரடியாக எதிர்ப்பவனை அவர் சந்திப்பதையே குறிப்பிடுகின்றது.[2] எனவே, தேவன் தமக்கெதிராகப் பாவம் செய்தவனை விசாரிக்கிறவராக இருப்பதாகவே இவ்வசனம் கூறுகிறது. இதனால், தகப்பன் செய்த பாவத்திற்காகத் தேவன் அவனைத் தண்டிக்காமல், அதை அவனுடைய பிள்ளையிடம் விசாரிப்பார் என்பது இவ்வசனத்தின் அர்த்தம் அல்ல. ஏனெனில், "பெற்றோரின் பாவ வாழ்வு பிள்ளைகளினாலும் பின்பற்றப்படுவதினால், அவர்களும் பெற்றோர் செய்த பாவத்தையே செய்கிறவர்களாக இருப்பார்கள். எனவே, பெற்றோர் என்ன பாவத்தைச் செய்தார்களோ அதே பாவத்தையே பிள்ளைகளும் செய்வதினால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதே பிதாக்களின் அக்கிரமம் பிள்ளைகளிடத்தில் விசாரிக்கப்படுவதாகும்."[3] இதனால், இத்தகைய

[1] J.M.Frame, *The Doctrine of the Christian Life*, p. 462.
[2] T.D.Alexander, *Exodus: Apollos Old Testament Commentary*, p. 406.
[3] C.F.Keil & F.Delitzsch, *Biblical Commentary on the Old Testament: The Pentateuch*, p. 117.

நிலையைச் சுட்டிக்காட்டும் விதத்திலேயே, அதாவது, நீ செய்கிற பாவத்தையே உன்னுடைய சந்ததியினரும் செய்து தேவனால் தண்டிக்கப்படுவார்கள் என்பதை அறிவிக்கும் விதத்திலேயே இவ்வசனம் உள்ளது.[4]

உண்மையில், “முன்னோர்கள் செய்த பாவத்திற்காக, அப்பாவத்தைச் செய்யாத மூன்றாம் அல்லது நான்காம் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பது வேதாகமத்தின் போதனை அல்ல.”[5] இதனால்தான், “பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில்” விசாரித்தல் என்பதைத் தவறாகப் புரிந்துகொண்டிருந்த இஸ்ரவேல் மக்களுக்கு இதைப்பற்றி விளக்கும்போது, “பிள்ளைகளுக்காகப் பிதாக்களும், பிதாக்களுக்காகப் பிள்ளைகளும் கொலை செய்யப்படவேண்டாம்” (உபா.24:16) என்று மோசே தெரிவித்துள்ளார். இதைப்போலவே, அமத்சியா என்னும் அரசன், தன்னுடைய தகப்பனைக் கொன்றவனைத் தண்டித்தபோது, அவனுடைய மகனைத் தண்டிக்கவில்லை என்பதை அறியத்தரும் 2ராஜாக்கள் 14:6இல், “ஆனாலும் பிள்ளைகளினிமித்தம் பிதாக்கள் கொலை செய்யப்படாமலும் பிதாக்களினிமித்தம் பிள்ளைகள் கொலை செய்யப்படாமலும், அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவன் கொலைசெய்யப்பட வேண்டும் என்று மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி, கர்த்தர் கட்டளையிட்டபிரகாரம் கொலை செய்தவர்களின் பிள்ளைகளை அவன் கொல்லாதிருந்தான்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் விசாரித்தல் என்பதை, தகப்பன் செய்த தவறுக்காக பிள்ளைகள் தண்டிக்கப்படுவார்கள் என்று எவ்விதத்திலும் விளக்க முடியாது. ஆனால், “பெற்றோரின் தவறுகளினால் பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றார்கள்”[6] என்பதையும், “இப்பாதிப்பு பல தலைமுறைகளுக்குத் தொடரும் என்பதையும் மறுக்க முடியாது.”[7] மேலும், “பிள்ளைகள் பெற்றோரோடு சேர்ந்து வாழ்வதினாலும், பெற்றோரைப் பார்த்து அவர்கள் செய்யும் பாவத்தைப் பிள்ளைகளும் செய்வதினாலும் தேவனுடைய தண்டனைக்கு உட்படுகின்றனர்.”[8] ஏனெனில், தகப்பன் செய்த பாவத்திற்காகப் பிள்ளைகளைத் தண்டிக்கும் விதத்தில் தேவன் நீதியும் நியாயமும் அற்றவராக ஒருபோதும் செயல்படுவதில்லை. ஆனால், மனிதர்கள் தங்களுடைய தவறுகளைப் பார்க்க முடியாத குருடர்களாக இருப்பதினால், தாங்கள் அநியாயமாகத் தண்டிக்கப்படுகிறோம் என்றும், பெற்றோரின் அல்லது மூதாதையரின் பாவங்கள் தங்கள்மீது சுமத்தப்பட்டுள்ளன என்றும் புலம்புகிறவர்களாக இருக்கின்றனர்.

யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன காலத்தில், பிதாக்கள் செய்த பாவத்திற்காகத் தாங்கள் அநியாயமாகத் தண்டிக்கப்படுகிறோம் என்று முறுமுறுத்த மக்களிடம், “பிதாக்கள் திராட்சைக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்னும் பழமொழியை நீங்கள் இஸ்ரவேல் தேசத்தைக் குறித்துச் சொல்லுகிறது என்ன? இனி இஸ்ரவேலில் இந்தப் பழமொழியைச் சொல்வது இல்லை என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்” (எசே.18:2-3) என்று தேவன் எசேக்கியேல் தீர்க்கதரிசியின் மூலம் தெரிவித்துள்ளார். இவ்வசனத்தில் “பிதாக்கள் திராட்சைக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்பேயின” என்பது, தகப்பன் செய்யும் பாவத்திற்காக அவனுடைய பிள்ளைகள் தண்டிக்கப்படுகிறார்கள் என்பதைக் குறிப்பிட அக்கால மக்கள் உபயோகித்த ஒரு பழமொழியாகும்.[9] ஆனாலும், எசேக்கியேலின் காலத்தில் யூதர்கள் இப்பழமொழியைத் தவறாகவே உபயோகித்தனர்.[10] அதாவது, அவர்கள் தேவனைக் குற்றப்படுத்தும் விதத்தில், தகப்பனுடைய பாவத்திற்காகத் தேவன் தங்களை நியாயமற்ற விதத்தில் தண்டிக்கிறார் என்னும் மனநிலையில், தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு எதிராகச் சொல்லப்பட்ட மனக்குமுறலாகவே இப்பழமொழி உபயோகிக்கப்பட்டுள்ளது.[11] மேலும், எருசலேம்

---

[4] D.I.Block, *Ezekiel 1-24: The New International Commentary on the Old Testament*, p. 559.
[5] D.K.Stuart, *Exodus: The New American Commentary*, p. 454.
[6] W.Grudem, *Christian Ethisc: An Introduction to Biblical Moral Reasoning*, pp. 282-283.
[7] F.B.Huey, Jr. *Exodus: Bible Study Commentary*, p. 87.
[8] W.A.VanGemeren, ed., *New International Dictionary of Old Testament Theology and Exegesis Volume 3*, p. 660.
[9] J.B.Taylor, *Ezekiel: Tyndale Old Testament Commentaries*, p. 147.
[10] I.M.Duguid, *Ezekiel: The NIV Application Commentary*, p. 234.
[11] W.Zimmerli, *Ezekiel Volume 1: Hermeneia Bible Commentary*, p.378.

நகரம் பாபிலோனியர்களினால் அழிக்கப்பட்டு, யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன காலத்தில் தீர்க்கதரிசியாகிய எரேமியாவும் இவ்விதமாகப் புலம்பியுள்ளார். இதனால்தான், புலம்பல் 5:7இல் "எங்கள் பிதாக்கள் பாவஞ்செய்து மாண்டுபோனார்கள். நாங்கள் அவர்களுடைய அக்கிரமங்களைச் சுமக்கிறோம்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இஸ்ரவேல் மக்கள் தொடர்ச்சியாகப் பல தலைமுறைகளாகத் தேவனுடைய உடன்படிக்கையின் நிபந்தனைகளாகக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாதவர்களாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாகத் தேவன் கொடுத்துவந்த எச்சரிப்புகளைக் கருத்திற்கொள்ளாதவர்களாகத் தொடர்ந்தும் பாவம் செய்து வந்ததினாலேயே தண்டிக்கப்பட்டனர். ஆனால், தீர்க்கதரிசிகள் மூலமாகக் கொடுக்கப்பட்ட எச்சரிப்புகளை மக்கள் கேட்டு மனந்திரும்பியிருந்தால், கொடிய நினிவே நகர மக்களையே மன்னித்த தேவன், தம்முடைய சொந்த ஜனங்களான இஸ்ரவேல் மக்களையும் மன்னித்திருப்பார். ஆனால், அவர்கள் மனந்திரும்பாததினாலேயே கி.மு.586இல் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனார்கள். எனவே, பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனவர்கள், செய்யாத பாவத்திற்காகத் தண்டிக்கப்பட்டவர்களாக இருக்கவில்லை. அவர்களுடைய மூதாதையர்கள் பாவம் செய்திருந்தாலும், பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனவர்களின் பாவம் அதைவிட அதிகமாக இருந்ததை 8ஆம் அதிகாரத்தில் எசேக்கியேல் சுட்டிக்காட்டியுள்ளார்.[12] இதனால்தான், பிதாக்கள் திராட்சைப் பழங்களைத் தின்றார்கள் பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்னும் பழமொழியை ஏன் சொல்கிறீர்கள் என்று தேவன் கேட்பதோடு, இஸ்ரவேலைக் குறித்து இந்தப் பழமொழியைச் சொல்லவேண்டாம் என்று கூறுகிறார். ஏனெனில், தகப்பனுடைய பாவத்திற்காகத் தாம் பிள்ளைகளைத் தண்டிக்கவில்லை என்றும், பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனவர்கள் அவர்களுடைய பாவத்திற்காகவே தண்டிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் தேவன் இவ்வதிகாரத்தில் விபரமாகக் குறிப்பிட்டுள்ளார்.[13]

தகப்பனுடைய பாவத்திற்காகப் பிள்ளை தண்டிக்கப்படுகின்றான் என்னும் அர்த்தமுள்ள பழமொழி பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன மக்களுக்கு எவ்விதத்திலும் பொருத்தமற்றது என்பதினால், இப்பழமொழியைச் சொல்லவே வேண்டாம் என்று கூறும் தேவன் (எசே.18:1-3),[14] "இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள். தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது. பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசே.18:4), என்று அறிவித்துள்ளதோடு, மூன்று உதாரணங்கள் மூலம் இதைப்பற்றி எசேக்கியேல் 18ஆம் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். இதனால்தான், நீதிமானாய் வாழ்பவன் தண்டிக்கப்படுவதில்லை என்று கூறும் தேவன் (எசே.18:5-9),[15] அவனுடைய மகன் பாவம் செய்தால் அதற்காக அவன் தண்டிக்கப்படுவான் என்றாலும் (எசே.18:10-13),[16] பாவம் செய்து தண்டிக்கப்படும் அவனுக்குப் பிறக்கும் பிள்ளை அவனுடைய பாவத்திற்காகத் தண்டிக்கப்படுவதில்லை என்றும் தெளிவாகத்

---

[12] J.B.Taylor, *Ezekiel: Tyndale Old Testament Commentaries*, p. 148.

[13] P.Joyce, "Individual Responsibility in Ezekiel 18" In *Studia Biblica*. (1979), pp. 185-196; J.Lust, ed., *Ezekiel and His Book*, pp. 317-321; G.H.Matties, *Ezekiel 18 and the Rhetoric of Moral Discourse*, pp. 113-158. T.C.Vriezen, *An Outline of Old Testament Theology*, pp. 386-387.

[14] D.I.Block, *Ezekiel 1-24: The New International Commentar on the Old Testament*, p. 559; I.M.Duguid, *Ezekiel: The NIV Application Commentary*, p. 234.

[15] எசேக்கியேல் 18:5-9இல், "ஒருவன் நீதிமானாயிருந்து, நியாயத்தையும் நீதியையும் செய்து, மலைகளின்மேல் சாப்பிடாமலும், இஸ்ரவேல் வம்சத்தாரின் நரகலான விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுக்காமலும், தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தாமலும் தூரஸ்திரீயோடே சேராமலும், ஒருவனையும் ஒடுக்காமலும், கொள்ளையிடாமலுமிருந்து, கடன் வாங்கினவனுக்கு அடைமானத்தைத் திரும்பக் கொடுத்து, தன் அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிட்டு, வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரம் தரிப்பித்து, வட்டிக்குக் கொடாமலும், பொலிசை வாங்காமலும், அநியாயத்துக்குத் தன்கையை விலக்கி, மனிதருக்குள்ள வழக்கை உண்மையாய்த் தீர்த்து, என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாயிருப்பானாகில் அவனே நீதிமான். அவன் பிழைக்கவே பிழைப்பான் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" என்று தேவன் தெரிவித்துள்ளார்.

[16] எசேக்கியேல் 18:10-13இல் "ஆனாலும் அவனுக்கு ஒரு குமாரன் பிறந்து, அவன் கள்ளனும் இரத்தஞ்சிந்துகிறவனும், மேற்சொல்லிய கடமைகளின்படி நடவாமல், இவைகளில் ஒன்றுக்கொப்பானதைச் செய்கிறவனுமாயிருந்து, மலைகளின்மேல் சாப்பிட்டு, தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தி, சிறுமையும் எளிமையுமானவனை ஒடுக்கி, கொள்ளைக்காரனாயிருந்து, அடைமானத்தைத் திரும்பக் கொடாமல், நரகலான விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுத்து, அருவருப்பானதைச் செய்து, வட்டிக்குக் கொடுத்து, பொலிசை வாங்கினால், அவன் பிழைப்பானோ? அவன் பிழைப்பதில்லை. இந்த எல்லா அருவருப்புகளையும் செய்தானே. அவன் சாகவே சாவான். அவன் இரத்தப்பழி அவன்மேல் இருக்கும்" என்று தேவன் தெரிவித்துள்ளார்.

தெரிவித்துள்ளார் (எசே.18:14-18).[17] இதனால்தான், “அவன் தன் தகப்பனுடைய அக்கிரமத்தினிமித்தம் சாகாமல் பிழைக்கவே பிழைப்பான். அவன் தகப்பனோவென்றால் கொடுமைசெய்து, சகோதரனைக் கொள்ளையிட்டு, தகாததைத் தன் ஜனங்களின் நடுவிலே செய்தபடியினால், இதோ, அவன் தன் அக்கிரமத்திலே சாவான்” என்று எசேக்கியேல் 18:17-18இல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, “தகப்பனுடைய பாவத்திற்காக தகப்பனே தண்டிக்கப்படுவான் என்றும், அதற்காக அவனுடைய மகன் தண்டிக்கப்படுவதில்லை” என்றும் தேவன் கூறுவதினால், 19ஆம் 20ஆம் வசனங்களில், “இதெப்படி, குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமக்கிறதில்லையா என்று நீங்கள் கேட்டால், குமாரன் நியாயத்தையும் நீதியையும் செய்து, என் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்ததினால், அவன் பிழைக்கவே பிழைப்பான். பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும். குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை. நீதிமானுடைய நீதி அவன்மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்” என்று தேவன் தெரிவித்துள்ளார். எனவே, தகப்பனுடைய பாவத்திற்காகப் பிள்ளைகளைத் தேவன் தண்டித்துள்ளார் என்று கூறுவது தவறாகும். இதனால்தான், இத்தகைய தவறான எண்ணத்தைத் திருத்துவதற்காகவே எசேக்கியேல் 18ஆம் அதிகாரத்தின் செய்தி அக்கால மக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.[18]

தகப்பனுடைய பாவத்திற்காகத் தேவன் பிள்ளைகளைத் தண்டிப்பதில்லை என்பது உண்மை என்றாலும், பாவம் செய்யும் மனிதன் தண்டிக்கப்பட்டபோது அவனோடிருந்த அவனுடைய குடும்பத்தினரும் பாதிக்கப்பட்டுள்ளதையும் பழைய ஏற்பாட்டில் நாம் பார்க்கலாம். உதாரணத்திற்கு, நாற்பது வருஷங்களாக எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட அத்தனை மக்களும் மரிக்கும் வரை, அவர்களுடைய பிள்ளைகள் அவர்களோடு நாற்பது வருஷங்களாக வனாந்திரத்தில் அலைந்து திரிந்தனர் (எண்.14:32-33).[19] மேலும், இஸ்ரவேல் மக்கள் வாக்குத்தத்த தேசத்தைக் கைப்பற்றுவதற்காக யுத்தம் செய்த காலத்தில், தேவனுடைய கட்டளையை மீறிப் பாவம் செய்த ஆகானின் குடும்பத்தினர் முழுமையாக அழிக்கப்பட்டனர் (யோசு.7:19-26). இதைப்போலவே, இஸ்ரவேலின் அரசர்களாக இருந்த சவுல், யெரோபெயாம், பாஷா என்பவர்களின் குடும்பத்தினரும் (2சாமு.21:8-9, 1ராஜா.14:10-18, 1ராஜா.16-1-12) தண்டிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இவைகள் தகப்பனுடைய பாவம் மூன்றாம் நான்காம் தலைமுறையினரிடம் விசாரிக்கப்பட்ட செயல்முறை அல்ல. ஏனெனில், இச்சம்பவங்களில் தகப்பனோடு சேர்ந்து வாழ்ந்த பிள்ளைகளே தண்டிக்கப்பட்டுள்ளனர். மேலும், இது பாவத்திற்காக ஒரு குடும்பம் முழுமையாகத் தண்டிக்கப்படும் செயல்முறையாகவே உள்ளது. இதற்குக் காரணம், ஒருவன் செய்யும் பாவத்திற்கு அவனோடு சேர்ந்து வாழும் குடும்பத்தினரும் உடந்தையாய் இருப்பதேயாகும். அதுமாத்திரமல்ல, அக்காலத்தில் ஒரு குடும்பத்தில் அல்லது, கோத்திரத்தில் உள்ளவர்கள் அனைவரும் தனித்தனி நபர்களாக இல்லாமல், அனைவரும் ஒன்றாகச் சேர்க்கப்பட்ட தனியொரு குடும்பமாக ஓரிடத்தில் ஒன்றாக வாழ்பவர்களாக இருந்ததினால், ஒருவன் செய்யும் பாவம் அவனோடு சேர்ந்து வாழும் அனைவரையும் பாதித்தது.[20] இதனால், இது ஒருவனுடைய பாவத்தைத் தேவன் அடுத்த தலைமுறையினரிடம் விசாரிக்கும்

[17] எசேக்கியேல் 18:14-18இல் “பின்னும், இதோ, அவனுக்கு ஒரு குமாரன் பிறந்து, அவன் தன் தகப்பன் செய்த எல்லாப் பாவங்களையும் கண்டு, தான் அவைகளின்படி செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, மலைகளின்மேல் சாப்பிடாமலும், இஸ்ரவேல் வம்சத்தாரின் நரகலான விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுக்காமலும், தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தாமலும், ஒருவனையும் ஒடுக்காமலும், அடைமானத்தை வைத்துக்கொண்டிராமலும், கொள்ளையிடாமலும், தன் அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிட்டு, வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரந்தரிப்பித்து, சிறுமையானவனுக்கு நோவுண்டாக்காதபடித் தன் கையை விலக்கி, வட்டியும் பொலிசையும் வாங்காமலிருந்து என் நியாயங்களின்படி செய்து, என் கட்டளைகளில் நடந்தால், அவன் தன் தகப்பனுடைய அக்கிரமத்தினிமித்தம் சாகாமல் பிழைக்கவே பிழைப்பான். அவன் தகப்பனோவென்றால் கொடுமைசெய்து, சகோதரனைக் கொள்ளையிட்டு, தகாததைத் தன் ஜனங்களின் நடுவிலே செய்தபடியினால், இதோ, அவன் தன் அக்கிரமத்திலே சாவான்” என்று தேவன் தெரிவித்துள்ளார்.

[18] L.E.Cooper, *Ezekiel: The New American Commentary*, p. 187; B.Vawter & L.J.Hoppe, *Ezekiel: International Theological Commentary*, p. 99.

[19] எண்ணாகமம் 14:32-33இல், “உங்கள் பிரேதங்களோ இந்த வனாந்தரத்திலே விழும். அவைகள் வனாந்திரத்திலே விழுந்துதீருமட்டும், உங்கள் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து, நீங்கள் சோரம்போன பாதகத்தைச் சுமப்பார்கள்” என்று தேவன் தெரிவித்துள்ளார்.

[20] V.P.Hamilton, *Exodus: An Exegetical Commentary*, p. 334.

செயல்முறை அல்ல. ஏனெனில், பாவம் செய்தவனோடு தண்டிக்கப்பட்டவர்கள் அனைவரும் ஒரே காலகட்டத்தில் அவனோடு சேர்ந்து வாழ்கிறவர்களாகவே இருந்தனர்.[21] ஏனெனில், அக்காலத்தில் பிள்ளைகள் பருவ வயதையடைந்து குறுகிய காலத்திலேயே திருமணமுடிப்பவர்களாக இருந்ததினால், ஒரு குடும்பத்தில் மூன்று அல்லது நான்கு தலைமுறை வரை அனைவரும் ஒன்றாக ஓரிடத்தில் வாழ்கிறவர்களாகவே இருந்தார்கள்.[22] மேலும், ஒருவனுடைய பாவத்திற்காகத் தேவன் பல தலைமுறைகள் கடந்து மனிதரைத் தண்டிக்கும் அளவிற்கு அநீதியானவர் அல்ல. இதனால், நீதியுள்ள நியாயாதிபதியான தேவன் ஒருவனைத் தண்டிக்கும்போது, அது அவனும் அவனோடு சேர்ந்து வாழ்பவர்களினதும் பாவத்திற்கான நியாயமான தண்டனையாகவே இருக்கும்.

நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்ட காலத்தில் தகப்பனுடைய பாவத்திற்காக அவனுடைய பிள்ளைகள் மூன்றம் நான்காம் தலைமுறை வரை தண்டிக்கப்படவில்லை என்பதை “கோராகின் புத்திரரினுடைய” வாழ்வில் நாம் பார்க்கலாம். ஏனெனில், கோராகு என்பவன் தாத்தான் அபிராம் என்பவர்ளுடன் 250 பேரைச் சேர்த்துக்கொண்டு, மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராகக் கலகம் செய்ததினால் குடும்பத்தோடு தேவனால் தண்டிக்கப்பட்டவர்களில் ஒருவன் (எண்.16:1-35). ஆனாலும், கோராகு தாத்தான் அபிராம் என்பவர்கள் தங்கள் குடும்பத்தோடு தேவனால் அழிக்கப்பட்டாலும், கோராகின் புத்திரர் அச்சமயம் மரிக்கவில்லை. இதனால்தான், எண்ணாகமம் 26:9-10இல் “எலியாபின் குமாரர் நேமுவேல், தாத்தான், அபிராம் என்பவர்களே சபையில் பேர்பெற்றவர்களாயிருந்து, கர்த்தருக்கு விரோதமாகப் போராட்டம்பண்ணி, கோராகின் கூட்டாளிகளாகி, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக விவாதம் பண்ணினவர்கள். பூமி தன் வாயைத் திறந்து, அவர்களையும் கோராகையும் விழுங்கினதினாலும், அக்கினி இருநூற்று ஐம்பது பேரைப் பட்சித்ததினாலும், அந்தக் கூட்டத்தார் செத்து, ஒரு அடையாளமானார்கள்” என்று கூறும் வேதாகமம், அடுத்த வசனத்தில், “கோராகின் குமாரரோ சாகவில்லை” என்பதை அறியத்தருகின்றது (எண்.26:11). மேலும், பிற்காலத்தில் இவர்களுடைய சந்ததியினர் ஆலயத்தில் பணிவிடைகளைச் செய்கிறவர்களை விசாரிக்கிறவர்களாகவும், ஆலயத்தைக் காவல் காப்பவர்களாகவும் (1நாளா.9:19),[23] ஆலயப் பாடகர்களாகவும் இருந்தனர்.[24] இதனால்தான், சங்கீதப் புத்தகத்தில் பதினொரு பாடல்கள்[25] “கோராகின் புத்திரருக்கு ஒப்புவிக்கப்பட்டவை” என்னும் தலைப்புடன் உள்ளன. இதனால், இச்சங்கீதங்கள் கோராகின் வம்சத்தினரால் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று சிலர் எண்ணினாலும்,[26] கோராகின் புத்திரர் இப்பாடல்களை எழுதியவர்களாக அல்ல,[27] ஆலயத்தில் இவற்றைப் பாடுகிறவர்களாகவே இருந்துள்ளனர். ஏனெனில், இச்சங்கீதங்களின் தலைப்பு இவைகள் கோராகின் புத்திரரினால் பாடப்பட்டவை என்றல்ல, “அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டவை” என்றே கூறுகின்றன. அதாவது “பாடுவதற்காக அவர்களுக்கு கொடுக்கப்பட்டவை” என்னும் அர்த்தத்திலேயே இத்தலைப்பு உள்ளது.[28] எனவே, கோராகு என்பவன் கலகம் செய்து தேவனால் அழிக்கப்பட்டாலும், அவனுடைய பிள்ளைகளின் வம்சத்தினர் ஆலயத்தில் பாடல்களைப் பாடுகிறவர்களாக இருந்துள்ளதினால், ஒருவனுடைய பாவத்திற்காக அவனுடைய சந்ததியினர் தண்டிக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. இதைப்போலவே, பாவம் செய்து தேவனால்

[21] R.E.Clements, *Exodus: The Cambridge Bible Commentary*, p. 124.

[22] M.T.Roth, “Age at Marriage and the Household” In *Comprative Studies in Society and History*. 28 (1987), pp. 715-747; J.H.Walton, V.H.Matthews & M.W.Chavalas, *The IVP Bible Background Commentary: Old Testament*, p. 95; E.Carpenter, *Exodus 19-40: Evangelical Exegeical Commentary*, p. 42.

[23] 1நாளாகமம் 9:19இல், “கோராகின் குமாரனாகிய எபியாசாபுக்குப் பிறந்த கோரேயின் மகன் சல்லூமும், அவன் பிதாவின் வம்சத்தாராகிய அவனுடைய சகோதரருமான கோராகியர் பணிவிடைவேலையை விசாரித்து, அவர்கள் பிதாக்கள் கர்த்தருடைய பாளத்திலே வாசஸ்தலத்திற்குப்போகிற வழியைக் காவல்காத்ததுபோல, வாசஸ்தலத்து வாசல்களைக் காத்துவந்தார்கள்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[24] D.Kidner, *Psalms 1-72: Tyndale Old Testament Commentaries*, p. 35.

[25] சங்கீதங்கள் 42, 44, 45, 46, 47, 48, 49, 84, 85, 87, 88 கோராகின் புத்திரருக்கு ஒப்பவிக்கப்பட்டவை என்னும் தலைப்புடன் உள்ளன.

[26] H.C.Leupold, *Exposition of Psalms*, p. 335; S.J.Lawson, *Psalms 1-75: Holman Old Testament Commentary*, 223; J.M.Boice, *Psalms Volume 2: An Expositional Commentary*, p. 366.

[27] J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 626.

[28] A.P.Ross, *Psalms: The Bible Knowledge Commentary Old Testament*, p. 825; P.J.Budd, *Numbers: Word Biblical Commentary Volume 5*, p. 292.

சபிக்கப்பட்ட காயீனின் வம்சத்தில் வந்தவர்களும் பல்வேறுவிதமான "புதிய பொருட்களைக் கண்டுபிடித்த உலகின் முதலாவது விஞ்ஞானிகளாயிருந்துள்ளனர்"[29] என்பதை ஆதியாகமம் 4ஆம் அதிகாரத்தில் உள்ள அவனுடைய வம்ச வரலாற்று அட்டவணை அறியத்தருகின்றது (ஆதி.4:20-22).[30]

தகப்பனுடைய பாவத்திற்காகத் தேவன் அவனுடைய பிள்ளைகளைத் தண்டிப்பவர் அல்ல என்றாலும், ஆதாமின் பாவம் அவனுடைய சந்ததியினர் அனைவரையும் பாதித்துள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனாலும், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலி, ஆதாமின் பாவத்தின் சாபங்கள் அனைத்திலிருந்தும் மனிதரை மீட்டுள்ளதினால், விசுவாசத்தினால் இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியைத் தங்களுடையதாக்கிக் கொள்பவர்கள் எவ்வித சாபத்திற்கும் உட்படுவதில்லை. இதனால்தான், "கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலா.3:13) என்று வேதாகமம் கூறுகிறது. எனவே, "தேவனுடைய நீதியுள்ள நியாயத்தீர்ப்பு, ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தனிப்பட்ட வாழ்வைப்பற்றி அவருக்கு கணக்கொப்புவிக்கும் காரியமாக இருக்குமே தவிர, மூதாதையரின் பாவத்திற்குப் பலியாகும் பரிதாபமான நிலையாக இருக்காது."[31] இதனால், பரம்பரை சாபங்களைப்பற்றி கிறிஸ்தவர்களாகிய நாம் பயப்படத் தேவையில்லை. ஏனெனில் இப்படி ஒரு சாபம் வேதாகமத்தில் இல்லை.

---

[29] K.A.Mathews, *Genesis 1-11: The New American Commentary*, p. 287.

[30] ஆதியாகமம் 420-22இல், "ஆதாள் யாபாலைப் பெற்றாள். அவன் கூடாரங்களில் வாசம்பண்ணுகிறவர்களுக்கும் மந்தை மேய்க்கிறவர்களுக்கும் தகப்பனானான். அவன் சகோதரனுடைய பேர் யூபால். அவன் கின்னரக்காரர் நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பனானான். சில்லாளும் தூபால் காயீனைப் பெற்றாள். அவன் பித்தளை இரும்பு முதலியவற்றின் தொழிலாளர் யாவருக்கும் ஆசாரியனானான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[31] J.W.Wevers, *Ezekiel: New Century Bible Commentar*, p. 108.